**1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திருமதி.S.பொன் மெலிசா B.A., LL.B,,**

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

திருநெல்வேலி

2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 14ம் நாள் வெள்ளிக்கிழமை

**இ.ம.எண்.4/2024 அதன் அ.வ.எண்.107/2018**

இசக்கிதேவர் ... மனுதாரர் /வாதி

–எதிர்–

1) கந்தசாமி (இறப்பு)
2) செண்டு
3) முத்துசெல்வம்
4) சீதா
5) தங்க பாண்டி
6) மணி
7) கிருஷ்ணவேணி ... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

(இ.ம.எண்.6/2025ல் 11.09.2025ம் தேதிய உத்தரவுப்படி மனு சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

இம்மனு என்முன்பாக 07.11.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.B.கமலநாதன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையிலும், 2 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.முத்துபாண்டியன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, மனுவில் கண்டுள்ளபடி அசல் வழக்கின் பிராதை சீர்திருத்தம் செய்ய அனுமதி அளித்து உத்தரவிடக் கோரி மனுதாரரால் கட்டளை 6 விதி 17 & 18 மற்றும் 151 சி.பி.சி.ன் பிரகாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–</u>**

அசல் வழக்கானது பிராது 2 வது தபசில் சொத்தினை பொறுத்து விளம்புகை மற்றும் செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், பிராது 4 வது தபசில் சொத்தினை பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது பி.வா.சா.1 ன் குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது. தட்டச்சு பிழையின் காரணமாக அசல் வழக்கில் பிராதில் 3 வது பாரா மற்றும் தபசில் சொத்துக்களில் சில தவறுகள் உள்ளது. எனவே, மேற்படி சங்கதிகளை பொறுத்த பிராதினை சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாகும். இந்த சீர்திருத்தத்தால் வழக்கின் தன்மை அமைப்பு மாறாது. எனவே, மனுவில் கண்டுள்ளபடி அசல் வழக்கின் பிராதை சீர்திருத்தம் செய்ய அனுமதி அளித்து உத்தரவிடக் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>6 ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 2 முதல் 5, 7 ம் எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:–</u>**

மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. அசல் வழக்கில் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு பிராது தபசிலில் சொல்லப்பட்டுள்ள எல்கை மாலின்படியும், அளவுகளின் படியும் பிராதுடன் தாக்கல் செய்த மாதிரி வரைபடத்தின் படியும் பசில் சொத்தை பார்வையிட்டு ஆணையர் 08.03.2023 ம் தேதியில் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். வாதி தரப்பில் சாட்சி விசாரணை முடிக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.1 முதல் விசாரணை செய்யப்பட்ட பின்பு தற்போது தான் தட்டச்சு பிழை பார்க்கப்பட்டது என்று சொல்வது முற்றிலும் தவறாகும். அசல் வழக்கில் ஆணையர் அறிக்கை தாக்கல் செய்த பின்பு எல்கை மாலில் மாற்றம் செய்வது வழக்கின் தன்மையை மாற்றுவதாகும். அசல் வழக்கினை இழுத்தடிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் மனுதாரர்

இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். எனவே, இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4) **<u>இந்த மனுவை பொறுத்தவரை தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரர் கோரியவாறு அசல் வழக்கின் பிராதினை சீர்திருத்தம் செய்ய அனுமதி அளித்து உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதேயாகும்.</u>**

5) இந்த மனுவை பொறுத்தவரை இருதரப்பிலும், வாய்மொழி சாட்சியம் எதுவும் இல்லை. சான்று ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6) இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**<u>தீர்வு</u>:–**

7) மனுதாரர்கள் தரப்பில், தட்டச்சு பிழையின் காரணமாக அசல் வழக்கின் பிராதில் 3 வது பாரா மற்றும் தபசில் சொத்துக்களில் சில தவறுகள் ஏற்பட்டுவிட்டது என்றும், மேற்படி சங்கதிகளை பொறுத்த பிராதினை சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் என்று கட்சி செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கில் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு பிராது தபசிலில் சொல்லப்பட்டுள்ள எல்கை மாலின்படியும், அளவுகளின் படியும் பிராதுடன் தாக்கல் செய்த மாதிரி வரைபடத்தின் படியும் தபசில் சொத்தை பார்வையிட்டு ஆணையர் 08.03.2023 ம் தேதியில் அறிக்கை சமர்ப்பித்துள்ளதாகவும், அசல் வழக்கில் ஆணையர் அறிக்கை தாக்கல் செய்த பின்பு எல்கை மாலில் மாற்றம் செய்வது வழக்கின் தன்மையை மாற்றிவிடும் என்றும் கட்சி செய்யப்பட்டுள்ளது.

8) அசல் வழக்கானது பிராது 2 வது தபசில் சொத்தினை பொறுத்து விளம்புகை மற்றும் செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், பிராது 4 வது

தபசில் சொத்தினை பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் பிராதில் ஏற்பட்ட சில தட்டச்சு பிழைகளை சீர்திருத்தம் செய்ய வேண்டுமென கோர இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். ஆனால், மனுவின் சீர்திருத்த விபரத்தில் குறிப்பிட்டுள்ள விவரத்தை பரிசீலிக்கையில், மனுதாரர் பிராதின் 3 வது பாராவில் குறிப்பிட்டுள்ள 3ம் தபசில் சொத்தின் குறியீடுகளை மாற்றும் வகையில் (DEFGHIK to FGHIJK) அமைந்துள்ளதுள்ளது. மேலும் பிராது 1 மற்றும் 2 வது தபசில் சொத்துக்களின் தெற்கு எல்கையை பிராது 3 வது தபசில் சொத்து என மாற்றம் செய்ய வேண்டுமென கூறப்பட்டுள்ளது. மேற்படி அமைப்புகள்தான் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மாதிரி வரைபடத்திலும் காட்டப்பட்டுள்ளது. மனுதாரர் கூறியுள்ளபடி பிராதினை சீர்திருத்தம் செய்வதினால், புதிதாக எந்தவித சொத்துக்களும் வழக்கில் சேர்க்கப்படவில்லை. மேலும், வழக்கில் புதிதாக வழக்குமூலம் எதுவும் ஏற்படபோவதில்லை. வழக்கின் தன்மை எதுவும் மாறப்போவதில்லை. மேலும் மேற்படி சீர்திருத்தங்கள் மூலம் மனுதாரர் பிராதில் கூறியுள்ள சங்கதிகள் எதையும் மறுத்து கட்சி செய்யவில்லை. எனவே, அசல் வழக்கின் சரியான தீர்வு காணவும், வழக்கின் பெருக்கத்தை தடுக்கவும், நீதியின் பால் நலன் கருதியும் இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. அதேவேளையில், அசல் வழக்கானது 2018ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு சுமார் 7 ஆண்டுகளாக நிலுவையில் உள்ள நிலையிலும், அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 சாட்சியம் விசாரிக்கப்பட்டுள்ள நிலையிலும், எதிர்மனுதாரர்களுக்கு ஏற்படும் கஷ்ட, நஷ்டங்களுக்காக மனுதாரர் ரூ.1,500/– எதிர்மனுதாரர்களுக்கு செலவுத்தொகையாக 20.11.2025ம் தேதிக்குள் செலுத்தும்பட்சத்தில் இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, இம்மனு மனுதாரர் ரூ.1,500/– எதிர்மனுதாரர்களுக்கு செலவுத்தொகையாக 20.11.2025ம் தேதிக்குள் செலுத்தும்பட்சத்தில் இம்மனுவினை அனுமதிக்கப்படும் என்றும், தவறும்பட்சத்தில் மனு தானாக தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 14ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PON MELISA S

Uploaded on 14.11.2025
Digitally signed by PON MELISA S
Date: 2025.11.14 17:31:18 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

<u>மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> - இல்லை
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> - இல்லை

PON MELISA S

Uploaded on 14.11.2025
Digitally signed by PON MELISA S
Date: 2025.11.14 17:31:24 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**இ.ம.எண்.4/2024 அதன்**

**அ.வ.எண்.107/2018**

சீரான / வரைவு – உத்தரவு
14.11.2025